**சுருக்கம்**

பள்ளிக்கல்வி ஸ்ரீ தமிழ்நாட்டிலுள்ள திறந்த வெளிப்பல்கலைக் கழகங்களால் இளங்கலை பட்டம் பெறாமல் நேரடியாக வழங்கப்படும் முதுகலைப் பட்டப்படிப்புக்கு ஊக்க ஊதிய உயர்வு அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டது ஸ்ரீ திருத்தம் வெளியிடப்படுகிறது.

------------------------------------------------------------------

**பள்ளிக்கல்வி (இ 2) துறை**

அரசாணை (நிலை) எண். 100
நாள் 30.04.2007.

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண். 307, ப.க. நாள் 15.12.2000.

2. அரசாணை (நிலை) எண். 29, ப.க. நாள் 17.2.2006.

3. தொடக்கக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க எண்.9702/எல்.3/96நாள் 8.3.2006

மற்றும் 4.11.2006.

4. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க. எண். 14187/கே.2/04 நாள் 29.5.2006.

-------

**ஆணை**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ் நாட்டிலுள்ள பல்கலைக் கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட திறந்த வெளிப்பல்கலைக் கழகங்கள் மூலம் இளங்கலைப் பட்டம் பெறாமல் நேரடியாக முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் அனைவருக்கும் ஆணை வெளியிடப்பட்ட நாளான 15.12.2000 முதல் ஊக்க ஊதிய உயர்வு வழங்கலாம் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களால் திறந்த வெளிப்பல்கலைக் கழகம் மூலம் இளங்கலை பட்டம் பெறாமல் நேரடியாக முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் அனைவருக்கும் அவர்கள் தேர்ச்சி பெற்ற நாள் முதல் ஊக்க ஊதிய உயர்வு வழங்கலாம் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. பள்ளிக்கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் திறந்த வெளிப்பல்கலைக் கழகங்களில் இளங்கலைப் பட்டம் பெறாமல் நேரடியாக முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் பி.எட். தேர்ச்சி பெற்ற நாளிலிருந்து எம்.ஏ./ எம்.எஸ்ஸி தகுதிக்கும் சேர்த்து இரு ஊக்க ஊதிய உயர்வு அளிக்கலாம் என்ற நிபந்தனையின் அடிப்படையில் அரசாணை (நிலை) எண். 29 ப.க. நாள் 17.2.2006க்கு உரிய திருத்தம் வெளியிடுமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளனர்.

4. பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் பரிந்துரையை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தபின் பி.எட். தேர்ச்சி பெறும் முன்னரே முதுக்கலை பட்டத் தகுதி பெற்ற ஆசிரியர்களிடமிருந்து தகுதியற்ற முறையீடுகள் பெற வாய்ப்புள்ள நிலையில், திறந்த வெளிப் பல்கலைக் கழகங்களில் இளங்கலைப் பட்டம் பெறாமல் நேரடியாக முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் பி.எட். தேர்ச்சி பெற்ற நாளிலிருந்து முதுக்கலைபட்டத் தகுதிக்கு இரு ஊக்க ஊதிய உயர்வு அளிக்கலாம் என்ற நிபந்தனையின் அடிப்படையில் அரசாணை (நிலை) எண். 29 ப.க. நாள் 17.2.2006க்கு உரிய திருத்தம் வெளியிடலாம் என அரசு முடிவு எடுத்துள்ளது. அதன்படி மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணைக்கு கீழ்க்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகிறது.

**திருத்தம்**

அரசாணை (நிலை) எண். 29 ப.க., நாள் 17.2.2006ல் தற்போதுள்ள பத்தி 3-க்கு பதிலாக கீழ்க்கண்ட பத்தி சேர்க்கப்படுகிறது.

"பல்கலைக் கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களால் நடத்தப்படும் திறந்த வெளிப் பல்கலைக் கழகம் மூலம் இளங்கலை பட்டம் பெறாமல் நேரடியாக முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் பி.எட். தேர்ச்சி பெற்ற நாளிலிருந்து முதுகலைப் பட்டத் தகுதிக்கும் சேர்த்து அதிகபட்சமாக இரு ஊக்க ஊதிய உயர்வுகள் (நான்கு ஊதிய உயர்வுகள்) அளிக்கலாம்".

6. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா. எண். 25255/சிவிறிசி/2007-1 நாள் 26.04. 2007 -ல் பெற்ற அத்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி )

**ம. குற்றாலிங்கம்,**
**அரசு செயலாளர்.**

பெறுநர்

பள்ளிக்கல்வி இயக்குநர்,சென்னை-6.
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை-6.
மாநிலக் கணக்காயர்,சென்னை-18.
சம்பளக்கணக்கு அலுவலர்,சென்னை-35.
நகல்
பள்ளிக்கல்வி துறையின் அனைத்துப் பிரிவுகளுக்கும், சென்னை-9.
நிதித்துறை, சென்னை-9.

பணியாளர் (ம)நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு நிதித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.

**/ ஆணைப்படி / அனுப்பப்படுகிறது /**

**பிரிவு அலுவலர்.**